சட்ட உதவி ஆணைக்குழு -2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சட்ட உதவி ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் கொள்கையானது குறைந்து செல்லும் மீதி முறைமையிலிருந்து 2012 ஆம் ஆண்டின் போது நேர்கோட்டு முறைமைக்கு மாற்றம் செய்யப்பட்டு பெறுமானத்தேய்வு விகிதமும் மாற்றப்பட்டிருந்த போதிலும் அம்மாற்றம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 859,925 தொகையான நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்தல் மீளாய்வாண்டின் போது ரூபா 3,723,763 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்னறன.

(அ) 2010 சனவரியிலிருந்து 2011 திசெம்பர் வரையான காலத்திற்காக வாழ்க்கைச் செலவுகள் மற்றும் ஏனைய படிகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு (12%) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு (3%) முறையே ரூபா 2,558,020 மற்றும் ரூபா 639,505 ஆக இருந்தன. அதற்கிணங்க ரூபா 3,197,525 கூட்டுமொத்தமான பங்களிப்பு பணம் முழுவதும் மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறை அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1,250,000 கூட்டுமொத்தமான நிலையான வைப்புக்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 198,479 தொகையான வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 1,250,000 தொகையான நிலையான வைப்பு காசு மீதியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அக்காரணத்தினால் நடைமுறையற்ற சொத்துக்கள் அத்தொகையால் குறைத்தும் நடைமுறைச் சொத்துக்கள் அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 32,000 தொகையான பதிவுசெய்தல் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 1998 இலிருந்து 2008 வரை மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 252,682 கூட்டுமொத்தமான கணக்காய்வுக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான செலவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 77,592 கூட்டுமொத்த தொகையான கணக்காய்வுக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் தவிர்க்கப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நிதிப்பிரமாணம் 168 இன் பிரகாரம் அனைத்து பெறுவனவுகளுக்காக பொது 172 படிவத்தின் கீழ் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 98,464,818 தொகையான பெறுவனவுகளுக்காக ஆணைக்குழுவினால் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 18,536,369 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,902,700 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 15,633,669 தொகையான வீழ்ச்சி உருவாகியமை தொடர்பாக சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் செலவுகளை உள்ளடக்கிய நிர்வாகச் செலவுகள் ரூபா 44,036,155 ஆல் அதிகரித்தமை விசேடமாகத் தாக்கமளித்திருந்தது

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2010 ஆம் ஆண்டின் போது ரூபா 6,423,543 தொகையாகக் காணப்பட்ட மிகை 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,902,700 மற்றும் ரூபா 18,536,369 தொகையான பற்றாக்குறையாகியமையால் நிதி விளைவுகளில் வீழ்ச்சி காணப்பட்டது. அக்காரணத்தினால் முன்னைய 03 ஆண்டுகளில் திரண்ட நிதியத்தின் செலவு மீதி முறையே ரூபா 23,099,977, ரூபா 20,197,277, ரூபா 1,660,909 வரை படிப்படியாகக் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு மற்றும் அதன் பிராந்திய நிலையங்களின் மூலம் 5837 வழக்குகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்படாதிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 27,601 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகம் மற்றும் ஏனைய 72 நிலையங்களின் மூலம் 47,435 நபர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது 07 சட்ட உதவி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி இல்லாதிருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 215 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது 38 புதிய நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு